**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040878

1. District மாவட்டம் : Tiruppur PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 6/2024/AC/TPR Date: நாள் 08.02.2024.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act, 1988 as amended by Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 07.08.2024 Date to : நாள் வரை -
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.30 hrs Time to : நேரம் வரை 23.50 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.08.2024 Time : நேரம் 12.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D. Vol II Time : நேரம் 12.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 4 km South East
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Assistant Executive Engineer (Rural Development), Tiruppur Sub Division, Tiruppur.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. P. Pandeeswari (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் L. Palanikumar
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45/2024 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் Special Tahsildhar (SSS) (g) Address : முகவரி Taluk Office, Tiruppur North, Tiruppur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Thiru. Dharmalingam S/o Thangarasu, Assistant Executive Engineer, (Rural Development) Tiruppur Sub division, Tiruppur.
   2) Tr. M. Sivaraj S/o. Mayilsamy, Assistant Engineer, Tiruppur Subdivision, Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. [signature] 8/8/2024 | [signature] 08.08.2024.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 08-08-2024.

Name: பெயர் K. SASILEKHA
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
VSAC, Tiruppur

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 6/2024/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 08.08.2024 ம் தேதி 12.00 மணிக்கு திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது திருப்பூர், வடக்கு வட்டாட்சியர் அலுவலக தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.ப.பாண்டீஸ்வரி அவர்கள் கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விபரம் பின் வருமாறு. அனுப்புநர் திருமதி.ப.பாண்டீஸ்வரி, தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்), வட்டாட்சியர் அலுவலகம், திருப்பூர் வடக்கு, திருப்பூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர். அம்மையீர், பொருள் : திடீர் தணிக்கை - திருப்பூர் மாவட்டம் - உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (ஊரக வளர்ச்சி), திருப்பூர் உபகோட்டம் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மனு மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக. பார்வை : திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் Roc.No.1300/2024/A2 dt.07.08.2024. திருப்பூர் மாவட்டம், திருப்பூர் குமரன் ரோடு பழைய கோர்ட் வீதியில் அமைந்துள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (ஊரக வளர்ச்சி) திருப்பூர் உபகோட்டம் அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் திருப்பூர் உட்கோட்டத்திற்கு உட்பட்ட கட்டிட வேலைகள்/சாலைபணிகள் ஒப்பந்தத்தில் ஒப்பந்ததாரர்கள் செய்த பணியினை தொழிற்நுட்ப அடிப்படையில் கூர்ந்தாய்வு செய்து பட்டியல் தொகை விடுவிப்பதற்காக ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சமாக 2 சதவிகிதம் கமிஷன் தொகை வசூல் செய்து வருவதாக கிடைக்கப்பெற்ற நம்ப தகுந்த தகவலின் அடிப்படையிலும், உதவி செயற்பொறியாளர் திரு.தர்மலிங்கம் என்பவர் ஒப்பந்த தாரர்களிடம் லஞ்சப்பணத்தை பெற்று அதனை அவரது TN 39AU 1683 Tata Bolt காரில் எடுத்து செல்வதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரிலும் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (ஊரக வளர்ச்சி) திருப்பூர் உப கோட்டம் அலுவலகத்தை 07.08.2024-ம் தேதி மாலை 18.00 மணியளவில் திடீர் தணிக்கை மேற்கொள்வதற்காக வந்த போது அந்த அலுவலகத்தில் இருந்து உதவி செயற்பொறியாளர் திரு.தர்மலிங்கம்

அவரது TN 39AU 1683 Tata Bolt காரில் சென்றவரை திடீர் தணிக்கை குழுவினர் பார்த்து அந்த காரை பின்தொடர்ந்து சென்று வளர்மதி பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள Titan Showroom அருகில் காரை மடக்கிய போது அந்த காரில் இருந்த நபரிடம் திடீர் தணிக்கை குழுவினர் விசாரித்த போது அவரது பெயர் தர்மலிங்கம் என்றும், திருப்பூர் உபகோட்டத்தில் உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை அலுவலகம் அழைத்து வரப்பட்டு அவர் வைத்திருந்த கிரே கலர் sleek பேக்கை சோதனை செய்ய இரண்டாவது அறையில் பிரவுன் நிற கவரில் 3 கத்தையாக பணம் இருந்தது. மேற்படி பணத்தை எண்ணி பார்க்க முதலாவது கத்தையில் ரூ.20,000/-மும், இரண்டாவது கத்தையில் ரூ.20,000/-மும், மூன்றாவது கத்தையில் ரூ.4,000/-மும் என மொத்தம் பணம் ரூ.44,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து விசாரித்த போது சரியான முகாந்திரம் கூறவில்லை. மேலும், சிவா டெக்ஸ்டைல்ஸ் என்ற மஞ்சள் நிற கட்டைப்பையை சோதனை செய்ய 5 M –book கள் மற்றும் பணி இறுதிபட்டியல்கள் மற்றும் 2 கத்தையாக பணம் இருந்தது. மேற்படி ஒரு கத்தையில் ரூ.30,000/-மும், இரண்டாவது கத்தையில் ரூ.12,000/-மும் என மொத்தம் பணம் ரூ.42,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து விசாரித்த போது ஊத்துக்குளி யூனியனில் தார் சாலை அமைக்கும் பணியை செய்து முடித்த ஒப்பந்ததாரர் ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு தொழில்நுட்ப பட்டியல் தயார் செய்து கொடுப்பதற்காக 2 சதவிகித கமிசன் தொகை என்று தெரிவித்தார். மேலும் அந்த அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணிபுரியும் திரு.M.சிவராஜ் என்பவர் அவரது சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டில் இருந்த பணத்தை வலது கையால் எடுத்து அவர் அமர்ந்திருந்த மேஜையின் மீது வைத்தார். மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.16,300/- இருந்தது. மேற்படி பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் கூறாததால் ஒப்பந்ததாரர்களிடம் லஞ்சமாக பெற்ற பணமாக இருக்க கூடும் என கருதி மேற்படி பணம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையில் பணம் ரூ.1,02,300/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கை விபரம் குறித்து ஒரு நடவடிக்கையை 07.08.2024-ம் தேதி மாலை 18.30 மணி முதல் 23.50 மணி வரை தயார் செய்து அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,02.300/-, திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட

முறைகேடுகள் தொடர்பாக புலன் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் XXXX திருமதி.ப.பாண்டீஸ்வரி 08.08.2024 Sir, received the complaint along with proceedings on 08.08.2024 at 12.00 hrs and a case in Tiruppur V& AC Cr.No.6/2024/AC/TPR U/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 was registered. ஒப்பம் xxxx K.சசிலேகா 08.08.2024 Inspr.V&AC, Tiruppur.

முதல் தகவல் அறிக்கை, புகார் மனு, திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,02,300/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

K.சசிலேகா
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருப்பூர், 08-08-2024.